# பரம நம்பிக்கை

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்
(சங். 143:10)

ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

ESTD. : 1978

மலர் - 48 மார்ச் – 2026 இதழ் 75


# தேவ பெலத்தை இழந்த சிம்சோன்

(சகோதரி ரீட்டா ஏசாயா)

**ஏசாயா 41:10 – நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தேவன் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை எப்படி பெலப்படுத்துகிறார் என்பதைக் கடந்த இதழிலே தியானித்தோம். அது நமக்குப் பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம்.

தேவன் நம்மை பலப்படுத்துகிறார் என்றால் நாம் அவர் சித்தம் செய்ய வேண்டும். அவருக்குப் பிரியமானவர்களாய், அவருக்குப் பிரயோஜனமானவர்களாய் வாழ வேண்டும். நாம் அவரடைய கரத்திலிருக்கிறோம் என்பதை மறந்து போகக் கூடாது. இந்த இதழிலே தேவன் பலப்படுத்தின ஒரு மனுஷனைப் பார்க்கப் போகிறோம். அவர் பேர் சிம்சோன். இவன் பிறப்பதற்கு முன்னதாகவே, தேவன் அவனைக் குறித்த ஒரு திட்டம் வைத்திருந்தார். அவன் தாய் மலடியாயிருந்தாள். அவளிடம் தேவ தூதன் வந்து "நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படலாகாது, அந்த பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான். அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கத் தொடங்குவான்" என்றார்.

சிம்சோனை தேவன் பிறப்பிலே பரிசுத்தமாய் பாது காத்தார். தாயின் மூலமாய் கூட அவன் அசுசிப்படக் கூடாது என்று நினைத்து அவன் தாயை தீட்டான காரியங்களுக்கு விலக்கினார். அவன் தேவனால் பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட நசரேயனாய் வெளிப்பட்டான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவ துவக்கினார். அவனுக்குள் மகாப் பெரிய பெலன் இருந்தது. கர்த்தர் அவனைப் பெலப்படுத்தினார். கர்த்தர் அவனுக்காக எவ்வளவோ காரியங்களைச் செய்தார். அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பான் என்று தேவன் எதிர்பார்த்தார்.

ஆனால் சிம்சோன் தேவ நோக்கத்தை செயல்படுத்தவில்லை. காரணம் அவன் கண்களின் இச்சையில் சிக்கி தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனான். ஆதி மனுஷர்களான ஆதாமும் ஏவாளும் கண்களின் இச்சையில் சிக்கி, தேவன் வேண்டாம் என்று ஒதுக்கின கனியைப் புசித்து தேவ மகிமையை இழந்து, தோட்டத்தை விட்டுத் துரத்தப்பட்டார்கள். அது போலவே சிம்சோனும் தேவ நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் அழிக்கப்பட்டான்.

அருமையான தேவ பிள்ளைகளே! நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் என்று இந்த வருடத்திலே தேவன் நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். நாம் அவருடைய வாக்கைக் காத்துக் கொள்ள வேண்டும். தேவனுக்குப் பிரியமாயிருப்போமானால் அவர் நம்மை பலப்படுத்தி சகாயம் பண்ணுவார்.

சிம்சோன் இச்சையில் சிக்கி, தேவனோடு அவனுக்கிருந்த பிரதிஷ்டையை உடைத்துப் போட்டான். அவனைக் கொண்டு தேவன் செய்ய நினைத்த திட்டங்கள் நிறைவேற முடியவில்லை.

அருமையான தேவ பிள்ளைகளே! தேவன் நம்மை பலப்படுத்தி சகாயம் பண்ணுகிறார் என்றால் நாம் அவருக்குப் பயந்து ஜீவிக்க வேண்டும். அவர் வழிகளில் நடக்க வேண்டும், அவர் சித்தம் செய்ய வேண்டும். இந்த காரியங்கள் சிம்சோனிடத்தில் காணப்படவே இல்லை. இவைகளைக் குறித்து ஆழமாக தியானிப்போம்.

**I. கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்க வேண்டும்: –** (II கொரி. 7:9)

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சிம்சோனிடத்தில் காணப்படவில்லை. அவன் தன் தாயையைம் தகப்பனையும் நோக்கி திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன் அவளை எனக்குக் கொள்ள வேண்டும் என்றான். அதற்கு அவர்கள் நீ விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ள வேண்டியதென்ன என்றார்கள். அதற்கு அவன் "அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள் அவளையே எனக்கு கொள்ள வேண்டும்" என்றான்.

இது அவனுக்குள் இருந்த தெய்வ பயம் அற்ற செயலைக் காட்டுகிறது. அவன் கண்கள் இச்சித்த காரியங்கள் கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியம் என்பதை சிம்சோன் அறியாமல் போனான்.

இதைக் குறித்து யோபு, "என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைவாயிருப்ப தெப்படி, அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும் பங்கும் உன்னதத்திலிருந்து சர்வ வல்லவர் கொடுக்கும் சுதந்திரமும் கிடைக்குமோ, மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரம செய்கைகாரனுக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும் "என்கிறார். மேலும் "என் இருதயம் என் கண்களை பின் தொடர்ந்ததும் உண்டோ" என்று யோபு கூறுகிறார். இங்கே சிம்சோனின் இருதயம் அவன் கண்களைப் பின் தொடர்ந்தது. கர்ப்பத்திலே அவனைத் தெரிந்து கொண்டும் அவன் தெய்வபயம் அற்றவனாய் வாழ்ந்து அழிவைத் தேடிக் கொண்டான்.

தேவ பிள்ளைகளே! தேவன் நம்மை அழைத்த அழைப்பும் கிருபாவரங்களும் மாறாதவைகள். தெய்வபயத்தோடே பரிசுத்தமாகுதலைப் பூரணப்படுத்தக் கடவோம் (II கொரி. 7:1)

### II.அவர் வழிகளில் நடக்க வேண்டும் : சங். 32:8

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்போமானால் அவர் வழிகளில் நடக்க வேண்டும். எகிப்தை விட்ட இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசிக்க எத்தனையோ வழிகள் இருந்தது. ஆனால் தேவன் காட்டும் வழியாகவே அவர்கள் வழி நடந்து சென்றார்கள். அது மிகவும் நெருக்கமான பாதையாகத்தான் அவர்களுக்குக் காணப்பட்டது. ஆனால் அது தான் ஜீவனுக்குப் போகிற பாதை. அங்கே கொள்ளிவாய் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீர் இல்லாததுமான வறட்சியான பாதையாக இருந்தாலும் கன்மலையின்" தண்ணீரும் மன்னாவும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது அது பயங்கரமான பெரிய வனாந்திரம். ஆனால் அதின் வழியாக தேவன் அவர்களை ஆச்சரியமாக நடத்தினார்.

ஆனால் சிம்சோன் தேவனின் வழி நடத்தலை விட்டுவிட்டான். அவன் பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேலை மீட்பதற்குப் பதிலாக பெலிஸ்தரின் தேசத்திலுள்ள பெண்களை இச்சித்து அவர்கள் பின்னாக போக ஆரம்பித்தான். அது அவனைக் கண்ணியில் விழப்பண்ணினது. அதை அவன் அறியாமல் போய் கர்த்தருடைய வழிகளை விட்டு, கர்த்தருக்குப் பிரியமில்லாத வழிகளில் நடந்து தன் பலத்தை இழந்து போனான்.

அருமையான தேவ பிள்ளைகளே! நாம் கர்த்தருடைய வழிகளில் நடக்க வேண்டும். நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்று அவர் வாக்குப் பண்ணியிருக்கிறார். நாம் அவர் வழிகளில் நடந்தால் அவர் நம்மைப் பலப்படுத்தி சகாயம் பண்ணுவார்.

### III.அவர் சித்தம் செய்ய வேண்டும்:(மத்தேயு. 7:21)

கடைசியாக பார்ப்போமானால் தேவனுடைய பிள்ளைகள் அவர் சித்தம் செய்ய வேண்டும். பெலிஸ்தர் கையில் இருந்து இஸ்ரவேலை மீட்கும் இரட்சகனாக தேவன் சிம்சோனைத் தெரிந்து கொண்டார். அதற்காக அவனை விசேஷப்படுத்தி பொருத்தனையின் குமாரனாக அவனை வெளிப்படப் பண்ணினார். அவன் நசரேயனாக நசரேய விரதத்தைக் காக்க வேண்டும் என்று தேவன் போதித்தார். அவன் மகா பெரிய பலமுடையவனாய் காணப்பட்டான். அவன் மகா பலம் அவன் நசரேய விரதத்தின் ஏழு ஜடைகளிலும் இருந்தது. சவரகன் கத்தி அவன் தலையில் படவில்லை. அவன் மகா பெலசாலியாயிருந்தான். ஆனால் அவன் அந்த தேவ பெலனை துர்பிரயோகப்படுத்தினான். அங்கே ஒரு வேசியின் வீட்டுக்குப் போய் நடுராத்திரி மட்டும் படுத்திருந்து, ராத்திரியிலே பட்டண வாசல் கதவுகளை பிடுங்கித் தன் தோல்மேல் வைத்துக் கொண்டு மலை உச்சிக்கு சுதந்து கொண்டு போனான். தேவன் இதற்காக அவனுக்குப் பெலனைக் கொடுக்கவில்லை. அதன்பின் தெலீலாள் வீட்டுக்குப் போய், அங்கே தன் பெலனை துர்பிரயோகப்படுத்துகிறான். கர்த்தருக்குப் பிரியமில்லாத எல்லா காரியங்களையும் சிம்சோன் செய்தான்.

தேவ சித்தத்துக்கு மாறான எல்லா காரியங்களையும் செய்து, கடைசியாக சாகத்தக்கதாக அவன் ஆத்துமா விசனப்பட்டு தன் பிரதிஷ்டையின் அனுபவத்தை உடைத்தான். பெலனற்று போனான்.

அருமையான தேவ பிள்ளைகளே! தேவன் நம்மை பரிசுத்தத்துக்கென்று அழைத்திருக்கிறார். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நம்மை பெலப்படுத்துகிற தேவன் நம்மோடிருக்கும் போது, அவர் சித்தம் செய்து வாழ்வதே நம் நோக்கமாயிருக்க வேண்டும். சிம்சோனுக்கு தேவன் பெலனை கொடுத்தார். அவன் எத்தனையோ கர்த்தருக்கு பிரியமில்லாத வழிகளில் போனாலும் அவர் கிருபையை அவனை விட்டு விலக்கவே இல்லை. கடைசியில் அவன் தேவனோடுள்ள பிரதிஷ்டையை உடைத்தான். அவன் மகா பெலன் அவனை விட்டு நீங்கனது.

அருமையான தேவ பிள்ளைகளே! தேவன் நமக்கு கிருபைக் கொடுத்து நம்மைப் பலப்படுத்தி நடத்தி வருகிறார். நாம் அவரோடுள்ள உடன்படிக்கையாகிய பிரதிஷ்டையின் அனுபவத்தை சிம்சோனைப் போல இழந்து போகாமல், கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடந்து, அவர் சித்தம் செய்வோம். அவர் நம்மை பலப்படுத்தி பாதுகாக்க வல்லமையுள்ளவர். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிக்க பாதுகாப்பாராக!

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பான வாசக நேயர்களே! உங்களுக்கு எங்கள் அன்பான வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் மூன்றாவது மாதத்துக்குள்ளாக பிரவேசிக்க தேவன் நமக்கு கிருபை செய்திருக்கிறார். அவருக்கே மகிமையுண்டாவதாக.

பிப்ரவரி 18ம் தேதியிலிருந்து "லெந்து நாட்கள்" என்று அநேகர் ஆசரித்து வருவதுண்டு. நாட்களை விசேஷித்திக் கொள்ளுகிறவர்கள். கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறார்கள். விசேஷித்துக் கொள்ளாதவர்களும் கர்த்தருக்குக் கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. நாங்கள் ஊழியங்களுக்கான ஜெபக்குறிப்புகளை ஆயத்தப்படுத்திக் கொடுத்து ஜெபிக்கச் சொல்வது வழக்கம். அதுபோல ஜெபக் குறிப்புகளை ஆயத்தப்படுத்திக் கொடுக்கக் கர்த்தர் கிருபை செய்தார்.

பாஸ்டர் அவர்கள் கடந்து சென்று பத்து மாதங்களைக் கழிக்கக் கர்த்தர் கிருபை செய்து நடத்தி வருகிறார். கடந்த மாதம் முழுவதும் எத்தனையோ வியாதி போராட்டங்களைக் கடந்து சென்றோம். கர்த்தரே எங்களோடிருந்து விடுவித்து எங்களைப் பெலப்படுத்தினார். அவருக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதம் "உச்சிதமான கோதுமையினால் உன்னைப் போஷிப்பார். கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்" என்று கர்த்தர் வாக்குப் பண்ணினார். அதன்படியே அவர் நல்ல ஒளஷதமாய் இருந்து எங்களைப் பெலப் படுத்தினார்.

வழக்கமாக நடக்கிற எல்லா ஊழியங்களையும் தவறாமல் செய்யக் கர்த்தர் கிருபை செய்து நடத்தி வருகிறார். பத்திரிகை மாதந்தோறும் வெளியிடக் கர்த்தர் கிருபை செய்து வருகிறார். எங்களோடு இணைந்து காணிக்கைகளை அனுப்பி "சிப்பியில் முத்து வினா – விடை" அனுப்பின தேவ பிள்ளைகளுக்கு "வாக்குத் தத்த வசனமும்" இவ்வாண்டிற்கான "காலாண்டரும்" அனுப்பி மகிழ்விக்கத் தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமையுண்டாவதாக!

தொடர்ந்து எங்களுக்காகவும் எங்கள் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மாம்பலத்தில் சீக்கிரமாக சொந்தமான ஆராதனை ஸ்தலத்தை தேவன் ஆயத்தப்படுத்தித் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ரீட்டா ஏசாயா**

## அறிவிப்பு

வாசக நேயர்களே! உங்கள் அன்புக்காகவும் ஜெபத்துக்காகவும் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் விட்டுச் சென்ற எல்லா ஊழியங்களையும் செய்து வருகிறோம். 'சிப்பியில் முத்து' வினா – விடை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் காணிக்கை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் தயவு செய்து பழைய விலாசத்தை மாற்றி புது விலாசத்தில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் ஜெபக் குறிப்புகளை இதே விலாசத்திற்கு அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம் நன்றி!

எங்கள் புதிய விலாசம்

**Sis. Rita Isaiah**

**214/2, AVA Palace,**
**Flat G1, V.G.N. Padma Avenue,**
**Kolapakkam**
**Chennai - 600 128.**
**Ph : 9384710267, 9789893830**

உங்கள் ஜெபமும் ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக! நன்றி.

***Jesus Christ is coming very soon! Are you ready?***

PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

WATCH AND PRAY

Watch! Pray!! Be Holy!!!

FEBRUARY - 2026

# PURSUE PEACE AND BE HOLY TO SEE THE LORD

Pursue peace with all people, and holiness, without which no one will see the Lord. – Hebrews 12:14

We are commanded to be holy that we might see God. Holiness is only gained through the blood of Christ and His resurrection. The word pursue means to chase after something, to hunt it down as a huntsman would his quarry, it's a total focus of the mind and heart on chasing something and going after something. Peace and holiness are to be our spiritual condition as well as our spiritual position. As His children we are already at peace with God because He forgave us our sins by grace through faith. But we are also to make every effort to maintain the inner peace of God that surpasses human understanding, by maintaining a mind that is stayed in Him.

Jesus said Peace I leave with you. My peace I give to you. I do not give to you as the world gives. Let not your heart be troubled or fearful. It is as we turn the eyes of our heart upon Jesus and fix the thoughts of our mind on Him that His peace, like a river, will flood our heart. In the same way, His holiness will become a practical reality in the life that is consecrated to Him. Because we are His children, by faith, we have been permanently positioned in Christ, which has given us peace with God, the forgiveness of sins, and life everlasting. But now that we have been saved by grace through faith in Him, we have to strive to live in peace with all people and to pursue godly consecration and holiness of heart without that no one will ever see the Lord.

We are called to be holy and set apart unto Him, for God is holy, but this cannot be achieved by our own efforts. We are commanded to be holy and consecrated unto the Lord in body, soul, and spirit, but we can't do this in our own strength. We are instructed to be holy in all our words and in all our ways. We are directed to be holy and blameless in His sight, and to pursue after peace and holiness, in love. It is only through the empowering of the Holy Spirit that we can pursue peace with all, and holiness, without which no one shall see the Lord. There are many perils and dangers for the one that fails to pursue peace and rejects Christ's call to holiness. Unless we are saved by faith, we cannot have peace with God and unless we are walking in spirit and truth, we will not know the peace of God. When we choose to walk in fleshly disobedience and carnal disbelief, when we take hold the privileges of the New Covenant in contempt, or

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

when we fellowship with the unfruitful works of darkness, the consequences of sin will result in irrevocable loss.

The above verse reminds us that our ultimate goal is to see God. Not just going to heaven; not just living forever; but seeing God. This is what we were made for: to behold God, and to be fulfilled by seeing His glory face to face. In Matthew 5:8 Jesus gave the ultimate beatitude, which was, blessed are the pure in heart, for they shall see God. Seeing God is the greatest reward for every one of us. The presence and glory of God seeing Him will give us joy and pleasure that will completely satisfy us.

We need to realize that this is what we were created for, and make sure that we will be there to see Him in eternity. But here's the thing seeing God is our ultimate goal, but Holiness is required to see the Lord. There is something required if you are going to see the Lord and here He refers something as sanctification. Sanctification means to be set apart, to be holy and pure from sin. He is a holy God, which means there is no evil or sin in Him. He is totally pure and perfect. And God is ultimate in holiness, which is why the angels before His throne cry out Holy, Holy, Holy is the Lord of hosts.

Even though we sinned, God the Father still loved us, and wanted us to be able to be with Him, so God the Son, Jesus Christ, came to earth and died on the cross to pay for our sins, so if we would repent of our sins, He would forgive us, and wash us from our sins through God the Holy Spirit. I John 1:9 says If we confess our sins, He is faithful and righteous to forgive us our sins, and to cleanse us from all unrighteousness. When we are saved, we are washed from all our sins, so we can go to heaven to live with a holy God forever and be satisfied by His presence. When you give your life to Jesus as your Lord and Savior, He sends His Holy Spirit into your heart, not only to cleanse your heart from the guilt of your sin, but also to give you power to start turning away from sin. So if the Holy Spirit is really in you, you will see some changes in your life. You will actually start to become holy in your everyday life and practices.

If you have really been saved and God's Holy Spirit is in you, then He will make a difference in your life, and He will start the process of making you holy, you will purify yourself; you will keep His commandments; and you will practice righteousness. So the first and best thing we can do to seek holiness is to seek God daily in His word and prayer. Pursuing holiness means you are really working on doing what God showed you in His word. Let's all maintain peace with all men and holiness in our lives, so that we can see God. -Amen

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,

## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

To My address:

Sis. Rita Isaiah
214/2, AVA Palace,Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam, Chennai - 600 128.
**Ph : 044-24710267**
**Cell : +91 9384710267, 9789815830**
E-mail : isaiahr@hotmail.com
Fax : 91-044-24710267
**Our website : www.risaiah.com**

# அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருப்போம்!

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் கண்மணியைப் போல கர்த்தர் நம்மைக் காப்பாற்றினார். இந்த மாதத்தின் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டவராகிய நம் இயேசு கிறிஸ்து வரும்பொழுது நாம் அவருடன் வருகையில் மறுரூபமாக வேண்டுமென்றால், நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு பயந்து ஜாக்கிரதையாய் ஜீவிக்க வேண்டும். நம்முடைய எண்ணங்கள், வார்த்தைகள், செய்கைகள், நடக்கைகளெல்லாவற்றிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**1. மோசே கன்மலையை அடித்தான்; ஆசீர்வாதத்தை இழந்தான். (எண்.20–11;12)**

மோசே தேவனுக்குப் பயந்து ஜீவித்தான் எண்.12:3ல் நாம் வாசிக்கிறபடி "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுண முள்ளவனாயிருந்தான்" என்று கர்த்தர் மோசேயைக் குறித்து நற்சாட்சி கொடுத்தார், மட்டுமல்ல மோசேயை தேவன் தம் ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரைக் கானானுக்குள் வழி நடத்தி செல்ல ஒரு சிறந்த தலைவனாகத் தெரிந்தெடுத்தார். ஆனால் ஒரு சிறிய கவனக் குறைவால் கன்மலையைப் பார்த்து பேசாமல், ஓங்கி தன் கோலினால் அடித்ததினால், அந்த கானான் தேசத்திற்கு போகமுடியாமல் அந்த ஆசீர்வாதத்தை இழந்தான், தேவ பிள்ளைகளே! ஒரு சில வேளைகளில், தேவ வசனத்திற்கு கீழ்படியாமல் அசதியாய் சில காரியங்கள் செய்யும்பொழுது, நமக்காக கர்த்தர் வைத்திருக்கிற பெரிய ஆசீர்வாதத்தை இழக்க நேரிடும் நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளாயிருப்பதினால் நாம் அதிக ஜாக்கிரதையாக ஜீவிக்க வேண்டும்.

**2. சிம்சோன் இரகசியத்தை வெளிப்படுத்தினான்; தன் பெலனை இழந்தான் (நியாய 16:17)**

சிம்சோன் என்பவன் நசரேயனாயிருந்து, இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீல்கலாக்கி இரட்சிக்கிறவனாயிருந்தான். கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கி இஸ்ரவேலருக்கு பெரிய இரட்சிப்பை பெற்று தந்தான். ஆனால் (நியா. 16:17 ல்) நாம் வாசிப்போமானால், சிம்சோன் தன் பலத்தின் இரகசியத்தை தெலீலாளிடத்தில் வெளிப்படுத்தினான். தனக்கு தேவன் கொடுத்த பலத்தை இழந்தான், அழிந்தே போனான். தேவ பிள்ளைகளே, நம் வார்த்தைகளை நாம் காத்துக் கொள்ள வேண்டும். நீதி 21:23 நாம் வாசிப்போமானால், "தன் வாயையும், தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்". நாமும் நம் நாவையும், வார்த்தைகளையும் அதீக கவனத்தோடு காத்து கொள்வோம். நம் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கி காப்போம்.

**3. எசேக்கியா ராஜா பொக்கீஷங்களை காண்பித்தான்; தேவ ஆசீர்வாதத்தை இழந்தான் (II இராஜா 20:13)**

எசேக்கியா ராஜா, தேவனுக்கு முன்பாக உண்மையும் மனஉத்தமமுமாய் நடந்தான். ஆனால், பாபிலோன் ராஜாவின் மக்களை அங்கீகரித்து தன் பொக்கிஷங்கள் அனைத்தையும் காண்பித்தான். தன் ஆயுதசாலை அனைத்தையும், தன் பொக்கீஷ சாலைகளிலுள்ள எல்லாவற்றையும் காண்பித்தான். இந்த செயல் தேவனுக்கு பிரியமில்லாததாயிருந்தது. தேவ பிள்ளைகளே,தேவன் நமக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள், கிருபைகள் எல்லாம் அவரது நாமத்தின் மகிமைக்கே உரியதாகும். அவைகள் நமக்கு பெருமை சேர்ப்பதாக மாறக்கூடாது. நமக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதத்தின் மூலம் பெருமை வருமானால் தேவன் நமக்கு எதிர்த்து நிற்பார். (யாக்.4:6) எசேக்கியா ராஜா எல்லாவற்றையும் காண்பித்ததினால், தன் பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்த பொக்கிஷங்களை இழந்தான். தேவ பிள்ளைகளே, தேவன் நமக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள் எல்லாம் தேவ கிருபையினிமித்தமேயல்லாமல் நாம் சுயமாய் பெற்று கொண்டவைகளல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**4. தாவீது ராஜா ஜனங்களை இலக்கம் பார்த்தான், கொடிய இடுக்கணில் அகப்பட்டான் (II** சாமு– 244.14)

தாவீது ராஜா இஸ்ரவேல் புத்திரரை இலக்கம் பார்ப்பதற்கு சாத்தானால் ஏவப்பட்டான். **II** சாமு 24:3, யோவாப் தாவீது ராஜாவை தடுத்தான். ஆனால் தாவீது ராஜா தேவன் விரும்பாத காரியத்தைச் செய்தான். இதனால் தேவன் கொடிய இடுக்கனில் அகப்பட செய்தார். இந்த மீறுதலினால், ஏறக்குறைய தாண் முதல் பொயர்செபா மட்டும் எழுபதினாயிரம் பேர் செத்துபோனார்கள் தேவ பிள்ளைகளே, நம்முடைய தேவன் மிகவும் இரக்கமுள்ளவரும், அன்புள்ளவராயிருக்கிறார். அதே சமயத்தில், நமது தேவன் நீதியுள்ள நியாயதிபதியாயிருக்கிறார். நாம் நமது வாழ்வில் "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருப்போம்" நமது தேவனுடைய கரத்தினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களை பெற்று நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்ளுவோம்! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

---

**வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்.** - *(சங்.119:113)*

**5. லோத்தின் மனைவி பின்னிட்டு பார்த்தாள், உப்புத்தூண் ஆனாள் (ஆதி. 9:26)**

தேவன் சோதோமையும் கொமோராவையும் அழிக்க தீர்மானித்தார். அவர்களுடைய கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் பெரிதாயிருப்பதினாலும், மற்றும் II பேதுரு 2:8ல் வாசிக்கிறபடி, நீதிமானாகிய லோத்துவின் இருதயம் வாதிக்கப்பட்டது.

ஆகவே தேவன் நீதிமானாகிய லோத்தையும் அவன் குடும்பத்தையும் மகா பெரிய அழிவினின்று காக்க சித்தங்கொண்டார் ஆதி,19:16 ல் கூறியப்படி, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். ஆதி 19:19ம் வசனத்திலே கூறியபடி "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டு பாராதே; இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ " என்றார். ஆனால் லோத்தின் மனைவியோ இந்த எச்சரிப்பின் சத்தத்திற்கு கீழ்ப்படியாமல், சோதோமிற்கு நேரிடும் தீங்கைக் காண திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புத்தூண் ஆனாள். தேவ பிள்ளைகளே, நாமும் கூட நம் பழைய வாழ்க்கையாகிய சோதோம் என்ற வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி தேவனிடத்தில் சேர்ந்தபிறகு, நமது பாவ வாழ்க்கையை திரும்பி பார்க்க துணிகரம் கொல்ல வேண்டாம். நம் ஜீவன் தப்ப நம் பரம கானானை நோக்கி ஒடுவோம்.

6. மிரியாம் மோசேக்கு விரோதமாய் பேசினாள், குஷ்டரோகியானாள் (எண். 12:2)

மோசே எத்தியோப்பியா தேசத்து பெண்ணை விவாகம் பண்ணினதினால், மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாக பேசி "கர்த்தர் மோசேயை கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் பேசினதில்லையோ என்றார்கள். ஏனென்றால், மிரியாமும் தீர்க்கத்தரிசியாயிருந்தாள். இப்படி தேவனுடைய மனுஷனுக்கு விரோதமாக பேசினதினால், தேவனுக்கு கோபம் உண்டானது. எண்.12:8 வசனத்தில் கூறியப்படி" நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன், அவன் கர்த்தரின் சாயலை காண்கிறான். இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாக பேச, உங்களுக்கு பயமில்லாமற் போனதென்ன என்றார்" உடனே மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள். தேவ பிள்ளைகளே நாமும் கூட அநேக நேரங்களில், தேவனுக்கு பயப்படாமல் தேவனுடைய ஊழியர்களை பரியாசமாய், அவதூராய் பேசுகிறோம். இதனால் தேவனுக்கு கோபம் மூளும் என்பதை பற்றி அறியாமலிருக்கிறோம். சங்.19:2ல் கூறியபடி "தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை தீங்கலாக்கும்" என்று தாவீது ராஜா தேவனிடத்தில் விண்ணப்பம் செய்கிறார். நாமும் தினமும் தேவனிடத்தில் இந்த வசனத்தை சொல்லி ஜெபிக்க வேண்டும். தேவ கிருபையை பெற்றுக் கொள்வோம். கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!


**உங்கள் பிரயோஜனத்துக்காக**
**யூடியூப் (You Tube) :-**
Paramanambikkai Messages
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries
**பாருங்கள்**


**இடத்திற்காக**

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங்களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – **www.risaiah.com**

**உங்கள் கவனத்திற்கு**

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவியானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **'Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள் (**Phone Number 044-26613242**). பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

***www.risaiah.com*** *இணையதளம் மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்து கொள்ளுகிறேன்!*
*–போதகர் ஆர்.ஏசாயா*

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

1. தாவீது – சங். 27:1
2. மோசே – உபா.34:7
3. பிலேயாம் – எண்.23:22
4. யோபு – யோபு. 6:12
5. யோபு – யோபு. 29:20
6. அகசியா – II நாளா 22:9
7. பவுல் – பிலி. 4:13
8. விலியாதான் – யோபு. 41:22
9. பிகெமோத்து – யோபு 40:16
10. தாவீது – சங். 18:1

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

1. சகோ. லில்லி புஷ்பம் – மாம்பலம்
2. சகோ. பெர்சிஸ் – வேளச்சேரி
3. சகோ.சரோஜினி கோயில்பிச்சை – பாளையங்கோட்டை
4. சகோ. தங்கம் ஐசக் – வேலூர்
5. சகோ.வசந்த் கமாலியேல் – சௌதி அரேபியா
6. சகோ. எஸ்தர் பானு – பொழிச்சலூர்
7. சகோ. ரெஜினா வின்சென்ட் – பெங்களூர்
8. சகோ. ராதா – பெருமாள்புரம்
9. சகோ. பிரேமா ஜெயசேகர் – வானகரம்
10. சகோ. ஷிபா ஞானதுரை – கோவை
11. சகோ. எஸ்தர் டேவிட் – கொளத்தூர்
12. சகோ. புனிதா அசரியா – அண்ணா நகர்
13. சகோ. பவித்ரா – திருவண்ணாமலை
14. சகோ. கேத்தரின் கவிதா – திருவண்ணாமலை
15. சகோ. சித்ரா – பெங்களூர்
16. சகோ. மேரி புஷ்பம் – துரைபாக்கம்
17. சகோ. ரதி ஜாய்ஸ் – கே.கே.நகர்
18. சகோ. ரெஜினா மேரி – பெருமாள்புரம்
19. சகோ. ஜெபா பெனியேல் – எம்.ஜி.ஆர்.நகர்
20. சகோ.ஷேரன் நிர்மல்குமார் – திருப்பத்தூர்
21. சகோ. இராஜகுமாரி – எம்.ஜி.ஆர்.நகர்
22. சகோ. ராஜகுமாரி – எம்.ஜி.ஆர்.நகர்
23. சகோ. ராஜ்பார் – பாடி
24. சகோ. மார்கிரேட் ஜோ – கோவை
25. சகோ. சுலோச்சனா – எம்.ஜி.ஆர்.நகர்
26. சகோ. சிப்போராள் எபனேசர் – மாம்பலம்
27. சகோ. லிடியா – எம்.ஜி.ஆர்.நகர்
28. சகோ. அருணா – வண்டலூர்

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

## இம்மாத சிப்பிகள்

1. உபவாசம் இருந்த ராஜாத்தி யார்?
2. இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து உபவாசித்த இராஜாவின் பிரதானி யார்?
3. இரவும் பகலும் உபவாசித்த பெண் தீர்க்கத்தரிசி யார்?
4. தன் வஸ்திரங்களைக் கிழித்து தன் சரீரத்தின் மேல் இரட்டைப் போர்த்துக் கொண்டு உபவாசித்த ராஜா யார்?
5. தேவனிடத்தில் பிராத்தனைப் பண்ணி உபவாசித்து இராமுழுவதும் தரையிலே கிடந்த இராஜா யார்?
6. என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன் என்ற இராஜா யார்?
7. வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன் என்றவன் யார்?
8. சில நாளாய் துக்கித்து உபவாசித்த ராஜாவின் பான பாத்திரக்காரன் யார்?
9. கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிற போது யார் யாரை ஊழியத்துக்காக பிரித்து விடும்படி ஆவியானவர் கூறினார்?
10. அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறின வேதபாரகன் யார்?

*குறிப்பு:* உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது **www.risaiah.com "E-Magazine'** சென்று கீழ் இறக்கம் **(Down Load)** செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம் **(Download)** தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள். **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
P.B. No.3276, Chennai - 600 033, South India.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Rev. R.Isaiah from at 23, Kodambakkam Road, West Mambalam, Chennai-33. for Paramanambikkai Ministries Trust.